Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 174 உள்ளூர் - 23.06.2026 செவ்வாய் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 174 வெளியூர் - 24.06.2026 புதன் Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

அதிர்ஷ்டம் ஈர்க்கும் உணவருந்தும் முறை!

மத்திய அரசில் (யுபிஎஸ்சி) 546 பணியிடங்கள்!

உயரும் கட்டட அனுமதி கட்டணம்?

கத்தார் ஆலை விபத்து: பலி 13

## வடபழனி - பூந்தமல்லி மெட்ரோ ரெயில் சேவையை அடுத்த மாதம் தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி?



சென்னை, ஜூன். 23–

வடபழனி – பூந்தமல்லி இடையிலான மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி அடுத்த மாதம் தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக மெட்ரோ ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கமிஷனர் ஒப்புதல்**

சென்னையில் 2–ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டப் பணிகள் 116.1 கிலோ மீட்டர் தொலைவுக்கு நடைபெற்று வருகிறது. 2–ம் கட்ட திட்டத்தில் வடபழனி – பூந்தமல்லி இடையே 14.6 கிலோ மீட்டர் தூரத்திற்கு வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழித்தடத்தில் டிரைவர் இல்லாத மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட இருக்கிறது. பூந்தமல்லி பைபாஸ், பூந்தமல்லி, முல்லைதோட்டம், குமணன்சாவடி, காட்டுப்பாக்கம், ஐயப்பன்தாங்கல், போரூர் உள்ளிட்ட 10 ரெயில் நிலையங்களில் ரெயில்கள் நின்று செல்லும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, கடந்த பிப்ரவரி மாதம் இவ்வழித்தடத்தில் மெட்ரோ ரெயில்களை இயக்குவதற்கு பாதுகாப்பு கமிஷனர் ஒப்புதல் வழங்கி இருந்தார். பாதுகாப்பு கமிஷனரின் ஒப்புதல் பெறப்பட்டதால் விரைவில் மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சட்டமன்றத் தேர்தல் நெருங்கியதால் வடபழனி – பூந்தமல்லி இடையே மெட்ரோ ரெயில் சேவையை தொடங்க முடியாமல் போனது.

**ஜூலையில் தொடக்கம்**

இந்த நிலையில், தமிழகத்தில் புதிய அரசு அமைந்த பின்னர் மெட்ரோ ரெயில் சேவையை தொடங்குவது குறித்து பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. வடபழனி – பூந்தமல்லி இடையே பணிகள் முடிவடை ந்தது குறித்து பிரதமர் அலுவலகத்திற்கு தமிழக அரசு சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. எனவே, அடுத்த மாதம் 2–வது அல்லது 3–வது வாரத்தில் வடபழனி – பூந்தமல்லி இடையே மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக மெட்ரோ ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, மெட்ரோ ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:–

ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் மத்திய மந்திரி சபையில் மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், ஜூலை மாதத்தின் 2 அல்லது 3–வது வாரத்தில் பிரதமர் மோடி தமிழகம் வருகை தருகிறார். அப்போது, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் 2 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவார் என கூறப்படுகிறது. அதோடு இணைந்து வடபழனி – பூந்தமல்லி இடையிலான மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைக்க வாய்ப்புள்ளது. இவ்வழித்தடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்போது 90 நிமிடமாக இருந்த பூந்தமல்லி – வடபழனி இடையிலான பயண நேரம் 30 நிமிடமாக குறையும். சாலை போக்குவரத்து நெரிசலும் குறையும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## விரைவில் 'ஒரே நாடு ஒரே ஜிஎஸ்டி'?




புதுடில்லி, ஜூன். 23–

'ஒரே நாடு; ஒரே வரி; ஒரே சந்தை' என்ற இலக்குடன் 2017ல் அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.,) அமைப்பில், மேலும் ஒரு முக்கிய சீர்திருத்தத்தை மேற்கொள்ள மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

தற்போது பல மாநிலங்களில் தொழில் நடத்தும் நிறுவனங்கள், ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாக ஜி.எஸ்.டி., பதிவு பெற வேண்டியது கட்டாயமாக உள்ளது. இதை மாற்றி, நாடு முழுவதற்கும் பான் எனப்படும் நிரந்தர கணக்கு எண் அடிப்படையிலான ஒரே ஜி.எஸ்.டி., பதிவை அறிமுகப்படுத்த கவுபா குழு பரிந்துரைத்து உள்ளது. இந்த பரிந்துரை, நடப்பு நிதியாண்டிலேயே அமல்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளதுடன், மத்திய அரசின் பரிசீலனையிலும் உள்ளது. தற்போதைய முறையில், ஒரு நிறுவனம் பல மாநிலங்களில் செயல்பட்டால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி ஜி.எஸ்.டி., பதிவு மற்றும் தனித்தனி வரி அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. இதனால் செலவுகளும் நிர்வாக சுமைகளும் அதிகம். இந்த நிலையில், ஒரே பான் எண்ணை அடிப்படையாக கொண்ட தேசிய அளவிலான ஜி.எஸ்.டி., பதிவு முறை அறிமுகமானால், பல மாநிலங்களில் செயல்படும் நிறுவனங்களுக்கான வரி நடைமுறைகள் எளிதாகும் என கூறப்படுகிறது. ஜி.எஸ்.டி., அமல்படுத்தப்பட்டபோது, மத்திய மற்றும் மாநில அரசுகள் விதித்து வந்த பல்வேறு மறைமுக வரிகள் ஒன்றிணைக்கப்பட்டன. மதிப்புக்கூட்டு வரி, சேவை வரி, மத்திய உற்பத்தி வரி, நுழைவு வரி உள்ளிட்ட பல வரிகள் ஜி.எஸ்.டி., அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், ஐ.டி.சி., எனப்படும் உள்ளீட்டு வரி வரவு முறையின் வாயிலாக, ஒரு பொருளின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடரின் ஒவ்வொரு கட்டத்திலும் கூடுதல் வரி மீது மீண்டும் வரி விதிக்கப்படும் நடைமுறை ரத்து செய்யப்பட்டது.

இந்த சூழலில், தொழில் நிறுவனங்களின் செலவுகளை மேலும் குறைத்து, நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரி நடைமுறையை உருவாக்கும் நோக்கில், கவுபா குழுவின் பரிந்துரைப்படி 'ஒரே நாடு; ஒரே ஜி.எஸ்.டி., பதிவு' என்ற அடுத்தக்கட்ட சீர்திருத்தத்தை அரசு பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்**

* பல மாநிலங்களில் செயல்படும் நிறுவனங் களுக்கு தனித்தனி ஜி.எஸ்.டி., பதிவுக்கு பதிலாக, ஒரே பான் எண் அடிப்படையில் பதிவு
* மாநில வாரியான வரி அறிக்கை தாக்கல் நடைமுறை குறையும்
* நிறுவனங்களின் செலவு மற்றும் நிர்வாக சுமை குறையும்
* 'ஒரே நாடு; ஒரே வரி; ஒரே சந்தை' கொள்கையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்
* பரிந்துரை தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது
* நடப்பு நிதியாண்டிலேயே அமல்படுத்தப்பட வாய்ப்பு

**கவுபா குழு**

மத்திய அமைச்சரவை செயலராக பணியாற்றிய ராஜீவ் கவுபா தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலை குழுவே கவுபா குழு.

தொழில் செய்வதை எளிதாக்குதல், வரி நடைமுறைகளை சீரமைத்தல், முதலீட்டு சூழலை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாக சிக்கல்களை குறைத்தல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்த குழு அமைக்கப்பட்டது. நடப்புநிதியாண்டில் செயல்படுத்தக்கூடிய பல்வேறு சீர்திருத்தங்களை ஆய்வு செய்து, மத்திய அரசுக்கு இக்குழு பரிந்துரைகளை வழங்கி வருகிறது.

## கத்தார் ஆலை விபத்து: பலி 13



தோஹா, ஜூன். 23–

கத்தாரில் உள்ள முக்கிய எரிவாயு சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில், இந்தியர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 66 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்படுகிறது.

மேற்காசிய நாடான கத்தாரின் புகழ்பெற்ற, 'ராஸ் லப்பான்' தொழிற்பேட்டையில், 'பர்சான்' எரிவாயு உற்பத்தி மையம் அமைந்துள்ளது. கடந்த நான்கு மாதங்களாக நீடித்த ஈரான் – அமெ ரிக்கா மோதல் காரணமாக, இந்த ஆலையில் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது இருநாடுகள் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், ஆலையை மீண்டும் இயக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஆலையில்பணியை தொடங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நடந்தன. அப்போது, எதிர்பாராதவிதமாக ஆலையின் ஒரு பகுதியில் பயங்கர சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட தீ, ஆலை முழுதும் பரவியது. இந்த விபத்தில், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த 13 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 66 தொழி லாளர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உயிரிழப்பை உறுதி செய்த கத்தார் நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் சாத் பின் ஷெரிடா அல்காபி, 'வெடி விபத்து தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏற்பட்டு உள்ளது.

'இதில், எந்தவித சதிவேலைகளோ, வெளிநபர் தாக்குதலோ இல்லை' என, தெரிவித்துள்ளார். உயிரிழந்த இந்தியர்களின் குடும்பத்தினருக்கு, கத்தாரில் உள்ள இந்திய துாதரகம் இரங்கல் தெரிவித்து உள்ளது.

## ஆளுநர் உரைக்கு நன்றி...

# அரசு பணத்தை தொட மாட்டோம் தொடவும் விடமாட்டோம்!

### ஏற்கனவே தொட்டவர்களை விடமாட்டோம்.. முதல்வர் விஜய் கர்ஜனை!!





சென்னை, ஜூன். 23–

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து இன்று சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் விஜய், "நான் ஏதோ படப்பிடிப்பில் இருந்து நேராக வந்து முதல்வர் ஆனது போல எதிர்க்கட்சிகள் பேசுகின்றன. 1990–கள் முதல் பல வழிகளில் மக்களுக்கு துணையாக நின்றேன். எனது படங்களில் முடிந்த அளவு ஊழல் ஒழிப்பு, சமூக நீதி, கல்வி, அரசியல் பற்றி சொன்னோம். அதற்காக எனது படங்கள் சந்தித்த பிரச்சினைகள் அதிகம். மக்கள் நம்மை தெளிவாக புரிந்துகொண்டதால் இன்று ஆட்சியில் அமர்ந்துள்ளோம்.

நாம் ஆட்சிக்கு வந்து 40 நாட்களில் சிங்கப்பெண் அதிரடிப் படை, 200 யூனிட் இலவச மின்சாரம், குறுவை சாகுபடி தொகுப்பு, போதைப்பொருள் ஒழிப்புப் படை, 717 மதுபானக் கடைகள் மூடல், அம்மா உணவகங்கள் புதுப்பிப்பு, பத்திரப்பதிவுத்துறை பகல் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட திட்டங்களை செய்துள்ளோம்.

தமிழ்நாட்டின் கருவூலம் தேய்ந்து, ஓய்ந்து கிடக்கிறது. இப்படி ஒரு நிலையை உருவாக்கி வைத்துவிட்டு, நமக்கு ஆட்சி செய்ய தெரியாது என்கிறார்கள். எங்களுக்கு மக்கள் பணி மட்டும் செய்யத் தெரியும், மக்கள் பணத்தை சுரண்டத் தெரியாது.

தமிழகம் மின்மிகை மாநிலமாக இருந்தாலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட நிர்வாக குளறுபடிகள், மின் சாதனங்கள், மின்மாற்றிகளில் ஏற்படும் பழுதாலும், வேண்டுமென்றே சிலரின் நடவடிக்கைகளுமே இந்த மின் வெட்டுக்கு காரணமாக உள்ளது.

ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையை கொண்டவர்கள் தான் நாம். தற்போதைய ஒன்றிய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நின்றாலும், எதெற்கெடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஒன்றிய அரசோடு மோதல் போக்கை விரும்புபவர்கள் நாம் அல்ல. நமக்கு எப்போதும் தமிழகத்தின் வளர்ச்சி தான் முக்கியம்.

அதற்காக அரசியல் ரீதியான கொள்கைகளையும், மாநில உரிமைகளையும் எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். இதில் மக்களுக்கும், சிறுபான்மை சகோதரர்களுக்கும், ஆதரவு இயக்கங்களுக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம்.

நாம் யாருடைய 'பி' டீமும் அல்ல, நாம் எப்போதும் தூய்மையான மக்களின் அணி. நீட் தேர்வு கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். அரசு விழாக்களில் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடுவது தான் நம் நிலைப்பாடு. சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் அக்கறையோடு கேட்பதாக தெரியவில்லை. சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் செய்வது அவதூறு அரசியல்." என்றார்.

முதல்வர் விஜய் பேச்சுக்கு திமுக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.. டாஸ்மாக்கில் கட்சி நிதி என முதல்வர் பேசியதற்கு திமுக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.. ஆதாரம் இல்லாமல், பேரவையில் அவதூறாக பேசியதாக திமுக உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.. கடும் எதிர்ப்புக்கு பின்னர் முதல்வர் விஜய் மீண்டும் பேசத் தொடங்கினார்..

"டாஸ்மாக் மட்டுமல்லாமல் பல துறைகளில் கட்சி நிதி வசூலிக்கப்பட்டது.. அரசு பணத்தை தொட மாட்டோம், தொடவும் விடமாட்டோம் ஏற்கனவே தொட்டவர்களை விடமாட்டோம்.. மக்கள் பணத்தை தொட்டவர்கள் யாராக இருந்தாலும் விட மாட்டோம்.. திமுக தயவால் தான் இந்த ஆட்சி நடக்கிறது என்று புதிய ஆயுதத்தை எடுத்துள்ளனர்.. மக்கள் தயவால் தான் இந்த ஆட்சி நடக்கிறது.

மனசாட்சி உள்ள சக்திகளாக் தான் இந்த ஆட்சி நடக்கிறது.. நீங்கள் அனுப்பி வைத்தவர்கள் என்றால், அமைச்சர் பதவி தந்தால் ஏன் கதறுகிறீர்கள்..? மா. கம்யூனிஸ்ட் நமக்கு தந்தது சுயேட்சையாக எடுத்த முடிவு என சொல்கின்றனர்..

ஊழலில் ஊறி போனவர்களால் ஆட்சியில் பங்கு என்பது அளிக்க முடியாது.. முதல்வர் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். சோஃபா மாடல் அரசு விமர்சிக்கின்றனர்.. அது என்னவென்று புரியவே என பல நாட்கள் ஆனது.. சோஃபா, ஃபர்னிச்சர் பிஸ்னஸ் எல்லாம் வெளியே செய்ய சொல்லுங்க.. சட்டப்பேரவையில் வேண்டாம்.. எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைத்தால் அதை ஏற்றுக் கொள்ள தயார்.." என்று தெரிவித்தார்..

## அதே சைகையில் பதிலடி கொடுத்த முதல்வர் விஜய்!



சென்னை, ஜூன். 23–

தேர்தலுக்கு முன், திமுக தலைவர் ஸ்டாலின் செய்த 'பினிஷிங்' சைகையை (ஜூன் 23) சட்டசபையில் சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அனுமதி பெற்று தமிழக முதல்வர் விஜய் செய்து காட்டினார்.

சட்டசபை தேர்தலுக்கு முன், திமுக தலைவர் ஸ்டாலின் செய்த 'பினிஷிங்' சைகை டிரெண்டிங் ஆனது. கொளத்தூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் வி.எஸ். பாபு.

தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, அவர் செய்தியாளர்களைச் சந்தித்து தனது வெற்றியை வெளிப்படுத்தும் வகையில் ஸ்டாலின் செய்த சைகையை செய்து காட்டினார். இது இணையத்தில் வைரலானது.

தற்போது இன்று சட்டசபையில் பதிலுரை நிகழ்த்திய முதல்வர் விஜய், சபாநாயகரிடம் அனுமதி பெற்று ஸ்டாலின் செய்த அதே சைகையை செய்து காட்டினார்.

**திமுக வெளிநடப்பு**

ஒவ்வொரு ஊழலும் வெளியே வருவதை பொறுக்க முடியவில்லை. மக்கள் பணத்தை நாங்கள் தொட மாட்டோம், யாரும் தொட்டாலும் விட மாட்டோம் என கடந்த திமுக ஆட்சியை கடுமையாக முதல்வர் விஜய் சாடி பேசினார். இந்த பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

**ஒத்திவைப்பு**

தமிழக சட்டசபையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார் சபாநாயகர் ஜேசிடி பிரபாகர்.

தலையங்கம்

மதுரை மணி

செவ்வாய்க்கிழமை 23.06.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 09-ம் தேதி

# ஒரு சவரன் தங்கம் 1 லட்சம் ரூபாய்க்கு கீழ் செல்லுமா?




தமிழ்நாட்டில் ஜூன் மாத தொடக்கத்தில் இருந்தே தங்கத்தின் விலை சரிவடைந்து தான் வருகிறது. அந்த வகையில் ஜூன் மாதம் முடிவதற்கு இன்னும் 10 நாட்களே இருக்கிறது. இந்த 10 நாட்களுக்குள் ஒரு சவரன் தங்கத்தின் விலை ஒரு லட்சம் ரூபாய்க்கும் கீழ் செல்லுமா என்ற எதிர்பார்த்து மக்களிடையே அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஜூன் 1ஆம் தேதி அன்று 22 கேரட் ஆபரண தங்கம் ஒரு கிராம் 14,500 ரூபாயாக இருந்தது. ஒரு சவரன் தங்கத்தின் விலை 1,16,000 ரூபாய் என விற்பனை செய்யப்பட்டது. இதனை அடுத்து படிப்படியாக குறைந்த தங்கம் இந்த மாதத்திலேயே குறைந்தபட்ச விலையாக ஜூன் 11ஆம் தேதி அன்று ஒரு கிராம் 13,500 ரூபாய் என்ற குறைந்தபட்ச விலையை எட்டியது. ஜூன் ஒன்றாம் தேதியுடன் ஒப்பிடும்போது ஜூன் 11ஆம் தேதி ஆபரண தங்கத்தின் விலை ஒரு கிராமுக்கு 1000 ரூபாய் விலை சரிவடைந்தது ஒரு சவரனுக்கு 8000 விலை குறைந்தது. அந்த வகையில் இந்த மாதத்திலேயே ஜூன் 11ஆம் தேதி அன்று தான் தமிழ்நாட்டில் ஆபரண தங்கத்தின் விலை ஒரு சவரன் 1,08,000 ரூபாய் என்ற குறைந்த பட்ச விலைக்கு விற்பனையானது. இதன்பிறகு ஈரான் போர் நிறுத்த அறிவிப்பை அடுத்து தங்கம் விலை லேசாக உயர்ந்தது. ஆனால் ஜூன் 15ஆம் தேதிக்கு பிறகு மீண்டும் தங்கம் விலை குறைய தொடங்கியது. அந்த வகையில் பார்க்கும்போது தமிழ்நாட்டில் இன்றைய தினம் 22 கேரட் ஆபரணத் தங்கம் ஒரு கிராம் 13,600 ரூபாய்க்கும் ஒரு சவரன் 1,08,600 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஜூன் ஒன்றாம் தேதி நிலவரத்தோடு ஒப்பிடும்போது ஆபரண தங்கத்தின் விலை ஒரு கிராமுக்கு 900 ரூபாயும் ஒரு சவரனுக்கு 7,200 ரூபாயும் சரிவடைந்து இருக்கிறது

ஜூன் ஒன்றாம் தேதி முதல் இன்று வரை தங்கம் விலை 6.21% சரிவை சந்தித்துள்ளது. இதனை 10 நாட்களுக்கு 3 % என பிரித்து இதே டிரெண்ட் அடுத்த 10 நாட்களும் தொடரும் பட்சத்தில் ஒரு கிராம் தங்கத்தின் விலை மேலும் 3% குறையும் வாய்ப்பு ஏற்படும். அதாவது தங்கம் விலை ஒரு கிராம் 13,180 ரூபாயாகவும், ஒரு சவரன் 1,05,440 ரூபாயாகவும் மாறும். தங்கம் விலை ஒரு சவரன் 1 லட்சம் ரூபாய்க்கு கீழ் செல்ல வேண்டும் என்றால் ஒரு கிராம் தங்கம் விலை 12,500 ரூபாய்க்கு கீழ் செல்ல வேண்டும். அதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. தற்போதைக்கு ஈரான் அமெரிக்கா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்து ஆவதில் மீண்டும் சிக்கல் எழுந்துள்ளது. ஈரான் மீண்டும் ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது அவ்வாறு மூடினால் பல்வேறு பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா பதிலடி தந்துள்ளது. இதன் காரணமாக உலக சந்தையில் ஒரு குழப்பமான சூழல் காணப்படுகிறது. தற்போது தங்கத்தின் முதலீடு செய்வதா அல்லது மீண்டும் கச்சா எண்ணெய் மற்றும் டாலரில் முதலீடு செய்வதா என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள் முதலீட்டாளர்கள்.

இதனால்தான் கடந்த செவ்வாய் முதல் வெள்ளிக்கிழமை வரையிலான நான்கு வர்த்தக நாட்களிலும் ஆபரண தங்கத்தின் விலை வெகுவாக குறைந்துள்ளது. சனிக்கிழமை ஆன நேற்று ஒரு கிராமுக்கு 30 ரூபாய் என லேசான விலை உயர்வு கண்டது. இனி வரும் நாட்களில் ஈரான் – அமெரிக்கா போர் நிறுத்த ஒப்பந்தம் எந்த திசையில் செல்ல போகிறதோ அதற்கேற்ப தான் தங்கம் விலையின் போக்கும் இருக்கும்.

# டெலிகிராம் மீண்டும் இயங்கத் தொடங்கியது...!




புதுடெல்லி, ஜூன். 23–

டெலிகிராம் செயலியை முழுமையாக பயன்படுத்த முடியாத வகையில் தடை விதிக்கப்பட்டதுடன், பயனர்கள் அனுப்பிய செய்திகளை திருத்தும் (எடிட்) வசதியையும் ஜூன் 30–ஆம் தேதி வரை முடக்குமாறு மத்திய அரசு உத்தரவிட்டது. இதனால் டெலிகிராம் பயனர்கள் கடும் சிரமத்தை சந்தித்தனர்.

இந்த நடவடிக்கையை எதிர்த்து டெலிகிராம் நிறுவனம் டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. ஆனால், அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், நீட் மறுதேர்வு நேற்று நடைபெற்றுத் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, டெலிகிராம் மீதான தற்காலிக தடை நீக்கப்பட்டுள்ளது. இதனால், டெலிகிராம் செயலி மீண்டும் வழக்கம்போல் செயல்படத் தொடங்கியுள்ளது.


நீண்ட இடைவெளிக்குப் பிறகு செயலி மீண்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளதால், டெலிகிராம் பயனர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# பணியிட மாறுதலுக்கு ஆன்லைன் தொடக்கம்!

சென்னை, ஜூன். 23–

மாநகராட்சிகள், நகராட்சிகளில் இனி 'ஆன்லைன்' வாயிலாக மட்டுமே, பணியிட மாறுதலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இடமாறுதலுக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் வாயிலாக விண்ணப்பித்து வந்தனர். அந்த நடைமுறையில், பலர் இடைத்தரகர் வாயிலாக, லட்சக்கணக்கான ரூபாய் அளித்து இடமாறுதல் பெற்று வந்தனர். இதனால், நகராட்சி நிர்வாக அலுவலகத்தில், எப்போதும் இடைத்தரகர் கூட்டம் இருந்து கொண்டே இருந்தது. அவர்களை ஒழிக்கும் வகையிலும், பணியிட மாறுதலை எளிதாக்கும் வகையிலும், ஆன்லைனில் விண்ணப்பிக்கும் நடைமுறையை, நகராட்சி நிர்வாகத் துறை கொண்டு வந்துள்ளது.



அனுமதி அதன்படி, cma.tncma@nic.in என்ற மின்னஞ்சல் வாயிலாக விண்ணப்பிக்கலாம். அதற்கான பிரத்யேக படிவமும், அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், அதிகாரிகள் மீது ள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை விபரம் குறித்தும், மாநகராட்சிகள், நகராட்சிகள் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து, நகராட்சி நிர்வாகத் துறை அதிகாரிகள் கூறியதாவது: மாநகராட்சிகள், நகராட்சிகளில் பணியிட மாறுதல் வெளிப்படை தன்மையுடன், நேர்மையாக நடப்பதை உறுதி செய்ய, முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். எனவே, நேரடி விண்ண ப்பத்திற்கு பதிலாக, ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட்டு ள்ளது.

அவசியம் சம்பந்த ப்பட்ட அதிகாரிகள், பணியாளர்கள், தற்போது பணியாற்றி வரும் இடத்தில் எத்தனை ஆண்டுகள், மா தங்கள் பணியாற்றுகின்றனர் போன்ற விபரம் கட்டாயம் அளிக்க வேண்டும். அதேபோல், பணியாளர் மீது ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை, குற்றச்சாட்டு, விசாரணை நிலுவையில் இருக்கிறதா என்ப தையும் தெரியப்படுத்துவது அவசியம். இதில், பணியிட மாறுதல் கேட்போர், மூன்று இடங்களை குறிப்பிடுவது முக்கியம். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மாறுதல் கேட்டால், அதற்கான ஆவணங்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மும்பை மற்றும் புனேவிற்கு 'ஆரஞ்சு அலர்ட்' எச்சரிக்கை: விரைவில் தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை!

புதுடெல்லி, ஜூன். 23–

மகாராஷ்டிராவில் தென்மேற்கு பருவமழை மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ள நிலையில், அடுத்த 48 மணி நேரத்திற்குள் அது மும்பை நகரை முழுமையாகக் கணிக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று மும்பையின் பல்வேறு பகுதிகளில் பெய்த பலத்த மழை, பருவமழைக்கு முந்தைய தற்காலிக சாரல் மழைதான் என்றும் வானிலை மையம் தெளிவுபடுத்தியுள்ளது.



பருவமழை நெருங்கி வருவதை ஒட்டி, மும்பை, புனே, ராய்காட் மற்றும் ரத்னகிரி ஆகிய மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் 'ஆரஞ்சு அலர்ட்' விடுத்துள்ளது. இதன் காரணமாக இந்த பகுதிகளில் மிகக் கடுமையான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதே நேரத்தில், தானே, பல்கர் மற்றும் சிந்துதுர்க் ஆகிய அண்டை மாவட்டங்களுக்கு 'மஞ்சள் அலர்ட்' விடுக்கப்பட்டு, மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று காலை நிலவரப்படி, பிரஹன் மும்பை மாநகராட்சி வெளியிட்ட தரவுகளின்படி, மும்பை நகரில் சராசரியாக 17 மில்லிமீட்டர் மழையும், மேற்கு புறநகர் பகுதிகளில் 10 மில்லிமீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. குறிப்பாக போரிவிலி, வொர்லி நாக்கா, பந்த்ரா போன்ற பகுதிகளில் உள்ள சில பள்ளிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் ஒரே மணி நேரத்தில் 60 முதல் 70 மில்லிமீட்டர் வரை மிக பலத்த மழை கொட்டித் தீர்த்துள்ளது.

கடந்த வாரம் சற்று சுணக்கமடைந்திருந்த பருவமழை, தற்போது மேற்கு கடற்கரை மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளை நோக்கி சீராக நகர்வதற்கு சாதகமான சூழல் உருவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி நாட்டின் ஒட்டுமொத்த மழைப்பொழிவு பற்றாக்குறை 43 சதவீதமாக இருக்கும் சூழலில், இந்த புதிய பருவமழைத் தொடக்கம் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் தேங்கும் மழைநீரால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்ளூர் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# ECR-க்கு ஷிப்ட் ஆகும் தமிழ்நாடு சட்டசபை?

சென்னை, ஜூன். 23–

தமிழ்நாடு சட்டசபையை மாற்ற வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகின்றன. மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆட்சி காலத்தில் (2006–11) சென்னை அண்ணாசாலையில் உள்ள ஓமந்தூரார் வளாகத்தில் புதிய சட்டசபை கட்டப்பட்டது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், இந்த சட்டசபை கட்டிடத்தை அரசு பன்னோக்கு ஆஸ்பத்திரியாக மாற்றினார். தொடர்ந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் சட்டசபை செயல்பட்டு வருகிறது.




**புதிய திட்டம்**

கோட்டை வளாகத்தின் நெரிசலைக் குறைக்கவும், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வித போக்குவரத்துப் பாதிப்பும் இன்றி எளிதாக வந்து செல்லவும் சட்டசபையை முட்டுக்காட்டில் கட்டப்படும் வரும் கலைஞர் சர்வதேச மாநாட்டு மையத்துக்கு மாற்றுவதற்கு த.வெ.க. அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

**கலைஞர் சர்வதேச மாநாட்டு மையம்**


ரூ.535 கோடியில் உலகத்தரத்தில் கட்டப்பட்டு வரும் இந்த மையத்தில் 5 ஆயிரம் பேர் அமரக்கூடிய பிரம்மாண்ட மாநாட்டு அரங்கும், ஒரே நேரத்தில் 10 ஆயிரம் பார்வையாளர்களைக் கொள்ளக்கூடிய மாபெரும் கண்காட்சி அரங்கும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த சர்வதேச மாநாட்டு மையத்தின் ஒட்டுமொத்த கட்டுமானப் பணிகளும் வருகிற டிசம்பர் மாதத்திற்குள் முழுமையாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா இதன் கட்டுமான பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருச்செந்தூர் முருகன் கோயிலில் பல்வேறு சேவைக் கட்டணங்கள் உயர்வு!

தூத்துக்குடி. ஜூன். 23–

திருச்செந்தூர் முருகன் கோவிலில் அபிஷேகம், சண்முகார்ச்சனை உள்ளிட்ட சேவைகளின் கட்டணங்களை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், அபிஷேகம், சண்முகார்ச்சனை, தங்கதேர் உலா போன்ற கட்டண சேவைகளின் தொகையை அதிகரிக்க கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.



இது குறித்து பக்தர்களிடம் கருத்து கேட்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், அதிகளவு உயர்ந்துள்ள விலைவாசியை கருத்தில் கொண்டும், கோவிலுக்கான வருவாய் குறைவை ஈடு செய்திடும் வகையிலும், நிர்வாக நலன் கருதி தக்கார் தீர்மானத்தின் அடிப்படையில், தற்போதுள்ள சேவை கட்டணங்கள் மற்றும் அபிஷேக சிறப்பு தரிசன கட்டணத்தை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தங்கரத உலா திட்டத்திற்கு 2,500 ரூபாயில் இருந்து 5,000 ரூபாயாக உயர்த்தவும், அதற்கு நிரந்தர வைப்பு நிதியை 50,000 ரூபாயில் இருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், சண்முகார்ச்சனை கட்டணத்தை, 5,000 ரூபாயில் இருந்து 30,000 ரூபாயாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மூலவர் அபிஷேகத்திற்கு, 1,500 ரூபாய் வாங்கிய இடத்தில் இரண்டு நபர்களுக்கு, 10,000 ரூபாய் பெற திட்டமிடப்பட்டுள்ளது. ஒன்பது கால பூஜைக்கு, 1,500 ரூபாய்க்கு பதிலாக, 6,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதில், நிரந்தர வைப்பு நிதியாக இருந்த 20,000 ரூபாயில் இருந்து 90,000 ரூபாயாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அபிஷேக தரிசன கட்டணம் சாதாரண நாட்களில், 500 ரூபாயும், விழா நாட்களில், 2,000 ரூபாய் என இருந்ததை அனைத்து நாட்களிலும் 2,500 ரூபாயாக உயர்த்தப்பட உள்ளது. கோவிலில் வருவாய் குறைந்துள்ளதால், இதை செயல்படுத்த மக்களிடம் ஆட்சேபனை ஏதும் இருந்தால், வரும் 7ம் தேதி மாலை, 5:45 மணிக்குள் கோவில் நிர்வாகத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும் என, அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், வருவாய் குறைவை காரணம் காட்டி, சேவை கட்டணங்கள், அபிஷேக சிறப்பு தரிசன கட்டணங்களை உயர்த்த கோவில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாக பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.



# அதிர்ஷ்டத்தையும் செல்வத்தையும் ஈர்க்க, எப்படி உணவருந்த வேண்டும் ? வாஸ்து சொல்வது?



இந்த காலத்தில் பலர் உணவு மேஜையில் (டைனிங் டேபிள்) அமர்ந்து உண்கிறார்கள். ஆனால் இந்திய பாரம்பரியத்தில், தரையில் அமர்ந்து உண்ணும் முறைக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. வாஸ்து சாஸ்திரம் மற்றும் ஆயுர்வேதத்தின்படி, உண்ணும் முறை, திசை மற்றும் இடம் ஆகியவை ஆரோக்கியம், மன அமைதி, குடும்ப நலம் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அப்படியானால், தரையில் அமர்ந்து உண்பது சிறந்ததா அல்லது உணவு மேஜையில் அமர்ந்து உண்பது சிறந்ததா? வாஸ்துவின் வழிகாட்டுதல்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

**தரையில் அமர்ந்து உண்பது ஏன் நல்லது?**

வாஸ்து சாஸ்திரம் மற்றும் ஆயுர்வேதத்தின்படி, வசதியான நிலையில் தரையில் அமர்ந்து உண்பதே சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில் அமர்வது உடலின் சமநிலையை மேம்படுத்துவதோடு, செரிமானத்தையும் சீராக்குகிறது என்று நம்பப்படுகிறது. உண்ணும்போது முன்னோக்கி குனிந்து மீண்டும் நிமிர்ந்து அமர்வது வயிற்றுத் தசைகளைச் செயல்படுத்துவதாகவும், செரிமான மண்டலத்திற்கு நல்லது என்றும் ஆயுர்வேத நிபுணர்கள் கூறுகின்றனர்.

**நேரடியாகத் தரையில் அமர வேண்டாம்.**

வாஸ்துவின்படி, உண்ணும்போது நேரடியாகத் தரையில் அமர்வதற்குப் பதிலாக பருத்தி, கம்பளி அல்லது குசாசனம் (துர்ப்பை புல் ஆசனம்) போன்றவற்றை விரித்து அமர்வது நல்லது. இவ்வாறு செய்வதால் உடலில் உள்ள நேர்மறை ஆற்றல் தக்கவைக்கப்படுவதாகவும், ஆற்றல் பூமிக்குள் செல்வது குறைக்கப்படுவதாகவும் நம்பப்படுகிறது.

தரையில் அமர்ந்து உண்ணும்போது, தட்டை நேரடியாகத் தரையில் வைப்பதற்குப் பதிலாக ஒரு சிறிய மேடை அல்லது தாங்கியில் (stand) வைப்பது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. அமர்ந்திருக்கும் நிலையை விடச் சற்று உயரத்தில் தட்டை வைப்பது உணவின் மீதான மரியாதையைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது.

**உணவு மேஜைக்கான வாஸ்து விதிகள்**

உணவு மேஜையைப் பயன்படுத்துபவர்களும் சில வாஸ்து வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று கூறப்படுகிறது.

உணவு மேஜை சதுர அல்லது செவ்வக வடிவில் இருக்க வேண்டும்.

வட்ட வடிவ மேஜைகள் ஆற்றல் சமநிலையைக் குறைப்பதாக வாஸ்து நம்புகிறது.

வீட்டின் மேற்கு அல்லது தென்மேற்கு திசையில் உணவு அறை அல்லது உணவு மேஜை அமைப்பது சிறந்தது.

உண்ணும்போது குடும்ப உறுப்பினர்கள் கிழக்கு அல்லது வடக்கு திசையை நோக்கி அமர வேண்டும்.

உணவு மேஜை உள்ள பகுதியில் உணவை பிரதிபலிக்கும் வகையில் கண்ணாடியை வைப்பது செல்வம் மற்றும் செழிப்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

உண்பதற்கு எந்த திசை சிறந்தது?

கிழக்கு திசை: கிழக்கு திசை சூரிய உதயத்தைக் குறிக்கிறது. இத்திசையை நோக்கி அமர்ந்து உண்பது ஆரோக்கியம், உற்சாகம் மற்றும் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும் என்று வாஸ்து கூறுகிறது.

வடக்கு திசை: வடக்கு திசை குபேரனின் திசையாகக் கருதப்படுகிறது. இந்தத் திசையை நோக்கி அமர்ந்து உண்பது அறிவு, செல்வம் மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு உகந்தது என்று நம்பப்படுகிறது. குறிப்பாக மாணவர்கள் மற்றும் பணிபுரிபவர்கள் இத்திசையைத் தேர்ந்தெடுப்பது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது.

மேற்குத் திசை: வணிகர்கள் மற்றும் வணிகத் துறையில் இருப்பவர்களுக்கு மேற்குத் திசை சாதகமானதாகக் கருதப்படுகிறது. இத்திசையை நோக்கி அமர்ந்து உண்பது லாபம், ஸ்திரத்தன்மை மற்றும் புதிய வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

**உண்ணும்போது ஏன் தெற்குத் திசையை நோக்கி அமரக்கூடாது?**

வாஸ்து சாஸ்திரத்தின்படி, தெற்குத் திசை எமன் மற்றும் முன்னோர்களின் திசையாகக் கருதப்படுகிறது. எனவே, பொதுவாக இத்திசையை நோக்கி அமர்ந்து உண்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செய்வது மன அழுத்தம் மற்றும் எதிர்மறை எண்ணங்களை அதிகரிக்கக்கூடும் என்று வாஸ்து நம்புகிறது.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, தரையில் அமர்ந்து உண்பதே மிகவும் மங்களகரமான முறையாகக் கருதப்படுகிறது. இருப்பினும், தற்கால வாழ்க்கை முறையில் உணவு மேஜையைப் (dining table) பயன்படுத்தினாலும், சரியான திசை, இடம் மற்றும் அமைப்பு போன்ற வாஸ்து விதிகளைப் பின்பற்றினால் நேர்மறையான பலன்களைப் பெற முடியும் என்று நம்பப்படுகிறது. உண்ணும் முறையானது உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்லாமல், மன அமைதி மற்றும் குடும்ப ஒற்றுமைக்கும் பங்களிக்கிறது என்று வாஸ்து குறிப்பிடுகிறது.




## பருவகால நோய்களைத் தவிர்க்க, நீங்கள் இந்த 5 விஷயங்களை பின்பற்றினால் போதும்..!




வானிலை மாற்றத்தால், பலர் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற பருவகால நோய்களுக்கு ஆளாகிறார்கள். இத்தகைய நேரங்களில் சந்தையில் கிடைக்கும் பல்வேறு மருந்துகளைப் பயன்படுத்துவதும், பலவிதமான வழிமுறைகளைப் பின்பற்றுவதும் இயல்பான ஒன்று. இருப்பினும், இவற்றில் பெரும்பாலானவை தவறான புரிதல்கள் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், பருவகால நோய்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள உண்மையில் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா?

ஆய்வு அறிக்கை ஒன்றின்படி, இந்த 5 எளிய வழிமுறைகளைப் பின்பற்றுவது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், எந்தவொரு தொற்றிலிருந்தும் உங்களைப் பாதுகாக்கும். அவை என்னவென்று இப்போது தெரிந்துகொள்வோம்.

**உங்கள் கைகளைத் தவறாமல் கழுவுங்கள்**

கண்களுக்குத் தெரியாத வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்கள் பரவுவதற்கு நம் கைகளே முக்கிய காரணமாக அமைகின்றன. நாம் தொடும் பொருட்கள் மூலமாகவே அவை நம் உடலுக்குள் நுழைகின்றன. அதனால்தான், சாப்பிடுவதற்கு முன்பும், வெளியிலிருந்து வீட்டிற்கு வந்த பிறகும் சோப்பு அல்லது ஹேண்ட் வாஷ் (hand wash) கொண்டு கைகளை நன்கு கழுவுவதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

**உடல்நலக்குறைவு இருந்தால் வீட்டிலேயே இருங்கள்.**

உங்களுக்குச் சளி அல்லது காய்ச்சல் (flu) அறிகுறிகள் இருந்தால், கட்டாயப்படுத்தி அலுவலகத்திற்கோ அல்லது வெளியிலோ செல்லாதீர்கள். வீட்டிலேயே தங்கி ஓய்வெடுப்பது நீங்கள் விரைவாகக் குணமடைய உதவுவதோடு, மற்றவர்களுக்கு வைரஸ் பரவுவதையும் தடுக்கும்.

**தடுப்பூசிகளைச் சரியான நேரத்தில் போட்டுக்கொள்ளுங்கள்**

பருவகால காய்ச்சல் போன்ற தொற்றுகளிலிருந்து நீண்ட காலப் பாதுகாப்பைப் பெறுவதற்குத் தடுப்பூசிகள் சிறந்த வழியாகும். உங்கள் மருத்துவரின் அறிவுரைப்படி, வயது மற்றும் உடல்நிலைக்கு ஏற்றவாறு காய்ச்சலுக்கான தடுப்பூசிகள் (flu shots) போன்றவற்றைச் சரியான நேரத்தில் போட்டுக்கொள்வது அவசியம்.

**காற்றோட்டமும் வெளிச்சமும் இருப்பதை உறுதி செய்யுங்கள்**

குளிர் காலத்திலோ அல்லது சளி பிடித்திருக்கும்போதோ பலர் தங்கள் கதவுகள் மற்றும் ஜன்னல்களை முழுமையாக மூடி வைக்கிறார்கள். இருப்பினும், அறையில் காற்றோட்டம் இல்லையென்றால், வைரஸ்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு விரைவாகப் பரவக்கூடும். முடிந்தபோதெல்லாம் ஜன்னல்களைத் திறந்து வைப்பது புதிய காற்று உள்ளே வரவும், அறையில் காற்றோட்டத்தை மேம்படுத்தவும் உதவும்.

**தூக்கத்திற்கு முன்னுரிமை அளியுங்கள்**

மிக முக்கியமான விஷயம் போதுமான அளவு தூங்குவதாகும். உங்கள் உடலுக்குப் போதுமான ஓய்வு கிடைக்கும்போதுதான் நோய் எதிர்ப்பு மண்டலம் திறம்பட செயல்படும். அப்போதுதான் வைரஸ்களை எதிர்த்துப் போராடுவதற்கான வலிமை உடலுக்குக் கிடைக்கிறது. எனவே, ஒரு நாளைக்குக் குறைந்தது 7 முதல் 8 மணிநேரம் தூங்குவது அவசியம்.

# உயரும் கட்டட அனுமதி கட்டணம்?

சென்னை, ஜூன். 23–

கட்டுமான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் ஆய்வு, வளர்ச்சி கட்டணங்களை, 30 ஆண்டுகளுக்கு பின் உயர்த்த, தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.



சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமான சி.எம்.டி.ஏ., மற்றும் நகர், ஊரமைப்பு துறையான டி.டி.சி.பி., வாயிலாக கட்டுமான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இதற்காக, தற்போது 'ஆன்லைன்' முறையில் விண்ணப்பங்ளை சமர்ப்பிக்கலாம்.

ஒற்றை சாளர முறை இணையதளத்தில், இதற்கான விண்ணப்பங்களை உள்ளீடு செய்யும்போது, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

அடுத்தகட்டமாக விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு செல்லும் நிலையில், கட்டண விபரங்கள் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும். இதன்படி, கட்டணம் செலுத்தியவுடன், ஒப்புதலுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். இதில், விண்ணப்பங்கள் சரிபார்த்தலுக்கான கட்டணம், ஒரு சதுர மீட்டருக்கு, 1.50 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

இதே போன்று, வளர்ச்சி கட்டணம் சதுர மீட்டருக்கு, 5 ரூபாய் என்ற அளவில் உள்ளது. கடந்த, 30 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களே தற்போதும் அமலில் உள்ளன. தற்போதைய சூழலுக்கு ஏற்ப, இந்த கட்டணங்களை உயர்த்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில், சி.எம்.டி.ஏ., உயரதிகாரிகள், இதற்கான பரிந்துரைகளை தெரிவித்தனர். ஆனால், அப்போது அமைச்சராக இருந்த சேகர்பாபு, கட்டண உயர்வுக்கு ஒப்புதல் தரவில்லை.

**வீடு விலை உயராது!**

தமிழகத்தில் முந்தைய ஆட்சி காலத்தில், கட்டுமான திட்ட அனுமதியின்போது, கட்சி நிதி என்ற பெயரில், சதுர அடி அடிப்படையில் பணம் வசூலிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், கட்சி நிதி வசூல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், கட்சி நிதி வகையில், கட்டுமான நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவு குறைந்துள்ளது. இந்நிலையில் கட்டண உயர்வை அமல்படுத்தும்போது, கூடுதல் செலவு ஏற்படாது. இதன் காரணமாக, கட்டண உயர்வை காரணமாக வைத்து, வீடுகள் விலையை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது என, வீட்டுவசதி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திரிணமுல் காங்., தலைவர் பதவியிலிருந்து மம்தா நீக்கம்!

கொல்கட்டா, ஜூன். 23–

மேற்கு வங்கத்தில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையில் பா.ஜ., ஆட்சி நடக்கிறது. முன்னதாக நடந்த சட்டசபை தேர்தல் தோல்வி எதிரொலியாக, முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜியின் திரிணமுல் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டது.

மம்தாவின் மருமகன் அபிஷேக் பானர்ஜி மீதான அதிருப்தி காரணமாக அக்கட்சி நிர்வாகிகள் பலர் வெளியேறினர். மம்தா பானர்ஜியால் அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ரித பிரதா பானர்ஜி தலைமையில், 60 எம்.எல்.ஏ.,க்கள் உட்பட முக்கிய நிர்வாகிகள் அதிருப்தி குழுவாக இயங்கி வருகிறது.



மேற்கு வங்க சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக ரிதபிரதா பானர்ஜி செயல்பட்டு வரும் நிலையில், அதிருப்தி எம்.எல்.ஏ.,க்களின் கூட்டம் நேற்று நடந்தது.

இதில், திரிணமுல் காங்.,கிற்கு புதிய தேசிய செயற்குழு அமைக்கப்பட்டது. கட்சி தலைவர் பதவியில் இருந்து மம்தா பானர்ஜி நீக்கப்பட்டார்.

புதிய தலைவராக ஹவுரா மத்திய சட்டசபை தொகுதி எம்.எல்.ஏ.,வான அரூப் ராய், துணைத் தலைவர்களாக பிர்ஹாத் ஹக்கீம், அரூப் பிஸ்வாஸ், ரத்தின் கோஷ், சபினா யாஸ்மின் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

பொதுச்செயலர்களாக ரிதபிரதா பானர்ஜி, ஜாவேத் கான், சந்தீபன் சாஹா ஆகியோரும் பொருளாளராக அன்சாரி உள்ளிட்டோர் பொறுப்பேற்றுள்ளனர்.

# மத்திய அமைச்சர் ஜார்ஜ் குரியன் ராஜினாமா!



புதுடெல்லி, ஜூன். 23–

மத்திய அமைச்சர் ஜார்ஜ் குரியன் பதவியை ராஜினாமா செய்துள்ளார். ராஜினாமா ஏற்கப்பட்டதாக ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த மூத்த பாஜ தலைவர் ஜார்ஜ் குரியன். இவர் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் மீன்வளத்துறை இணை அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். ராஜ்யசபா எம்.பி.யாக இருந்த இவரது பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து, தனது மத்திய அமைச்சர் பதவியை அவர் ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை ஜனாதிபதி மாளிகை ஏற்றுக்கொண்டது. பாஜ தொடங்கப்பட்டது முதல் கட்சியில் தீவிரமாகச் செயல்பட்டு வரும் மூத்த தலைவர்களில் ஒருவர். கேரள மாநில அரசியலில் கட்சியின் முக்கியப் பிரமுகராக ஆவார்.

மத்திய அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும் என்று பல மாதங்களாக பேசப்பட்டு வந்தது. தமிழகம், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநில தேர்தல், ராஜ்யசபா தேர்தல் முடிவுகளுக்காக பாஜ தலைமை காத்திருப்பதாக தகவல்கள் வெளியாகின.

தற்போது தேர்தல்கள் முடிந்த நிலையில், விரைவில் அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட உள்ளது. அதன் முன்னோட்டமாகவே, கேரளாவை சேர்ந்த மத்திய அமைச்சர் ஜார்ஜ் குரியன் ராஜினாமா செய்துள்ளார் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழகத்தில் 18 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை!




சென்னை, ஜூன். 23–

சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட 18 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை இன்று காலை முதல் நடந்து வருகிறது.

கடந்த 2017ல் அரசு பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு நடத்தியதில் குளறுபடி நடந்ததாக எழுந்த புகாரில் 156 பேர் மீது மத்திய குற்றப்பிரிவு வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்திருப்பதாக கூறி அமலாக்கத்துறையினரும் வழக்கு பதிந்துள்ளனர்.

அதன் அடிப்படையில் தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட 18 இடங்களில் சோதனை நடந்து வருகிறது. ஓய்வு பெற்ற கல்வித்துறை அதிகாரிகள் வீடுகள், நிறுவனங்களில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தவெக - எம்எல்ஏ.,க்கள் மாவட்ட செயலர்கள் மோதல் அதிகரிப்பு...!

சென்னை, ஜூன். 23–

தமிழக வெற்றிக் கழகத்திற்குள் புகைந்து கொண்டிருந்த உட்கட்சி பிரச்னைகள் தற்போது ஒவ்வொன்றாக வெடித்து சிதற தொடங்கி உள்ளன. மாற்றுக் கட்சியில் இருந்து வந்த 106 பேருக்கு, சட்டசபை தேர்தலில் போட்டியிட 'சீட்' வழங்கினார் த.வெ.க., தலைவர் விஜய். இதனால், மாவட்ட செயலர்கள் 62 பேர் உட்பட, கட்சியின் முக்கிய நிர்வாகிகளுக்கு 'சீட்' கிடைக்கவில்லை.



**பூதாகரம்**

அப்போதே கட்சிக்குள் அதிருப்தி உருவானது. தேர்தல் முடிவில், மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்த 49 பேர் வெற்றி பெற்றனர்; அவர்களில் ஏழு பேர் அமைச்சராகினர். இந்நிலையில், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், மா.செ.,க்களுக்கு இடையே உட்கட்சி பிரச்னைகள் பூதாகரமாகி வருவதாக த.வெ.க., வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்த வட்டாரங்கள் மேலும் கூறியதாவது: திருவெறும்பூர் தொகுதியை உள்ளடக்கிய, திருச்சி புறநகர் தெற்கு மாவட்ட செயலர் அருள்ராஜு–க்கு சீட் தராமல், தி.மு.க.,வில் இருந்து வந்த விஜிக்கு சீட் தரப்பட்டது.

விஜி வெற்றி பெற்று எம்.எல்.ஏ., ஆனதோடு, மா.செ., பதவிக்கு முயன்று வருவதால், பிரச்னை வெடித்தது. அருள்ராஜின் ஆதரவாளர் சபரி என்பவரை, கெட்ட வார்த்தை சொல்லி விஜி வறுத்தெடுக்கும் ஆடியோ வெளியானது.

அதேபோல், வேட்பாளர் அறிவிப்புக்கு முந்தினம் கட்சியில் இணைந்து, சிவகாசியில் போட்டியிட்ட கீர்த்தனா, அமைச்சராகி விட்டார். அவரால், விருதுநகர் வடமேற்கு மா.செ., மாரி செல்வத்துக்கும் சீட் கிடைக்க வில்லை.

ஆரம்பத்தில் இருந்தே இருவருக்கும் ஆகவில்லை. சிவகாசியில் அமைச்சர் பங்கேற்கும் எந்த நிகழ்ச்சிக்கும், மாரிசெல்வத்துக்கு அழைப்பு தருவதில்லை.

சிவகாசியில் நடந்த முதல்வர் விஜய் பிறந்த நாள் விழாவில், இரு தரப்புக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அமைச்சரின் ஆதரவாளர்கள் வைத்திருந்த பேனரும் கிழிக்கப்பட்டது.

**பனிப்போர்**

தென்சென்னை வடக்கு மா.செ., அப்புனுவின் தி.நகர் தொகுதியில் பொதுச்செயலர் ஆனந்தும், ஆயிரம் விளக்கில் பிரபாகரும் போட்டியிட்டதால், அவருக்கு சீட் கிடைக்கவில்லை. தற்போது இருவரும் 'பவர்புல்' ஆகி விட்டதால், அப்புனுவை யாருமே மதிப்பதில்லை. விரக்தியில் உள்ள அப்புனு முடங்கி விட்டார்.

அதேபோல், தென்சென்னை தெற்கு மா.செ., தாமு விரும்பிய வேளச்சேரியை குமாரும், மயிலாப்பூரை வெங்கட்ரமணனும் வாங்கினர். தொகுதி இல்லாமல் ராயபுரத்தில் நின்று எம்.எல்.ஏ., ஆனார் தாமு.

குமாரும், வெங்கட்ரமணனும் அமைச்சர் ஆகி ஆதிக்கம் செலுத்துவதால், மாவட்டத்தில் எதுவும் செய்ய முடியாமல் பொருமி வருகிறார் தாமு. அமைச்சர்களின் ஆதரவாளர்கள் அதிகரித்து வருவதால், இரு தரப்புக்கும் இடையே 'போஸ்டர்' மோதல் வெடித்து உள்ளது.

இதனிடையே, தாமுவின் ராயபுரம் வருகையால், சீட்டை இழந்த வடசென்னை தெற்கு மா.செ., 'கட்பீஸ்' விஜயராகவன், ராயபுரத்தில் தாமு ஆதிக்கம் செலுத்துவதை ரசிக்க வில்லை. இருவருக்கும் பனிப்போர் மூண்டுள்ளது. வி.எஸ்.பாபுவால் கொளத்துார் தொகுதியை இழந்த, சென்னை வடமேற்கு மா.செ., தணிகாசலம், எந்த நிகழ்ச்சிக்கும், எம்.எல்.ஏ.,வை அழைப்பதில்லை. பாபுவும் தணிகாவை அழைப்பது இல்லை.

இதேபோல், காஞ்சிபுரம், வேலுார், திருச்சி, கோவை, நாமக்கல், துாத்துக்குடி, திருநெல்வேலி, ராமநாதபுரம் உட்பட தமிழகம் முழுதும் உட்கட்சி பிரச்னை கொழுந்து விட்டு எரிகிறது. மாற்றுக் கட்சியினரின் வருகை, அதை தீவிரப்படுத்தியுள்ளது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின.

# வாகனங்கள் சிறப்பு பதிவெண் கட்டணம் பல மடங்கு உயர்கிறது!




சென்னை, ஜூன். 23–

வாகனங்களுக்கான, 'பேன்சி' எண் என கூறப்படும், சிறப்பு பதிவெண்ணை முன்கூட்டியே பெறுவதற்கான கட்டணங்களை உயர்த்த, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான வரைவு திருத்த அறிவிப்பு, தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, அரசால் ஒதுக்கப்படும் முன்பதிவு, பதிவு எண்களுக்கு, தற்போதைய வரிசை மற்றும் அடுத்த மூன்று வரிசைகளுக்கு, 80,000 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 13 மற்றும் 14வது வரிசைக்கான சிறப்பு எண்களை பெற, 8 லட்சம் ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படும்.

இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு, வாகனத்தின் மதிப்பை அடிப்படையாக வைத்து, 2,000 ரூபாய் முதல், ஒரு லட்சம் ரூபாய் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கார் மற்றும் பிற வாகனங்களுக்கு, 20,000 ரூபாய் முதல் 1.50 லட்சம் ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படும்.

அரசு உயர்த்த உள்ள கட்டணம், தற்போதுள்ளதை விட, இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகம் என, போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசில் (யுபிஎஸ்சி) 546 பணியிடங்கள்! விண்ணப்பிக்க ரெடியா?

மத்திய அரசு துறைகளில் காலியாக உள்ள 546 ஜூனியர் சயின்டிபிக் ஆபீசர், மெடிக்கல் ஆபீசர், அசிஸ்டண்ட் பப்ளிக் ப்ராசிகியூட்டர், சயின்டிஸ்ட் 'B' மற்றும் இதர பல்வேறு பணியிடங்களை நிரப்புவதற்கான புதிய வேலைவாய்ப்பு அறிவிப்பை மத்திய பணியாளர் தேர்வு ஆணையம் (யுபிஎஸ்சி)

**பணியிடங்கள் விவரம்:**

* ஜூனியர் அறிவியல் அதிகாரி 9
* மண்டல இயக்குநர் – 2
* செயல்பாட்டு அதிகாரி (டிஜிசிஏ) – 19 *
விமானப் பாதுகாப்பு அதிகாரி (Air Safety Officer) – 15
* இணைப் பேராசிரியர், சிவில் பொறியியல் (போக்குவரத்து) – 1 * உதவிப் பேராசிரியர், மின்சாரப் பொறியியல் (மின்சார இயந்திரங்கள்) – 1
* உதவிப் பேராசிரியர், கணினிப் பொறியியல் (செயற்கை நுண்ணறிவு) – 1 பணியிடம்
* உதவிப் பேராசிரியர், கணினிப் பொறியியல் (செயற்கை நுண்ணறிவு / கணினிப் * பொறியியல் / நெட்வொர்க்கிங் மற்றும் சைபர் பாதுகாப்பு) – 1 பணியிடம் என 95 வகையான பணியிடங்களில் மொத்தம் 546 காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

**கல்வித் தகுதி:**

பி.இ/பிடெக், எல்.எல்.பி, எம்.ஏ, எம்.சி,ஏ, எம்பிபிஎஸ், பிஹெச்எம்.எஸ், முதுகலை பட்டம் அல்லது மருத்துவத் துறையில் டிப்ளமோ போன்ற கல்வித் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். கல்வித் தகுதி பற்றிய முழு விவரங்களை தேர்வர்கள் தேர்வு அறிவிப்பில் பார்த்து உறுதி செய்து கொள்ளலாம். அசிஸ்டண்ட் பப்ளிக் ப்ராசிகியூட்டர்: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பு (LLB) முடித்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு:**

பணியிடங்களைப் பொறுத்து அதிகபட்ச வயது வரம்பு மாறுபடுகிறது. சில பணிகளுக்கு அதிகபட்சமாக 50 வயது வரை விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களுக்கு அரசு விதிகளின்படி வயது வரம்பில் தளர்வுகள் வழங்கப்படும்.

**தேர்வு முறை:**

எழுத்து தேர்வு, நேர்முகத்தேர்வு அடிப்படையில் தேர்வர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணமாக ரூ.25 செலுத்த வேண்டும். எஸ்சி/எஸ்டி, மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு விண்னப்ப கட்டணம் கிடையாது.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:**

விண்ணப்பிக்க வரும் 03.07.2026 கடைசி நாளாகும். தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் UP–SC–யின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://www.upsc.gov.in/ மூலம் ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். தேர்வு அறிவிப்பினை படிக்க: https://www.upsc.gov.in/sites/default/files/AdvtNo–06–2026–Engl–120626.pdf

# இந்த வாரத்தில் மட்டும் தொடர்ந்து 3 நாட்கள் வங்கிகள் இயங்காது..!

சென்னை, ஜூன். 23–

மொஹரம் பண்டிகையை முன்னிட்டு நாட்டின் சில பகுதிகளில் ஜூன் 25 அல்லது ஜூன் 26 ஆகிய தேதிகளில் வங்கிகள் மூடப்பட்டிருக்கும். விஜயவாடா பகுதியில் ஜூன் 25 அன்றும், ஹைதராபாத் பகுதியில் ஜூன் 26 அன்றும் மொஹரம் விடுமுறை அளிக்கப்படும். உள்ளூர் பண்டிகை அறிவிப்புகளின் அடிப்படையில் இந்த மாற்றங்கள் அமையும். மொஹரம் விடுமுறைக்குப் பிறகு வரும் நான்காவது சனிக்கிழமையான ஜூன் 27 அன்றும் வங்கிகள் செயல்படாது. ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை என்பதால், அன்றைய தினமும் வங்கிகள் இயங்காது. இதனால் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வங்கி கிளை சேவைகள் கிடைக்காது.

# அமோனியா வாயு கசிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக உயர்வு!

திருவள்ளூர், ஜூன். 23–

திருவள்ளூர் பெரியபாளையத்தில் உள்ள ஆலையில் அமோனியா வாயு கசிவால் பாதிக்கப்பட்டு ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அசாம் மாநிலத்தை சேர்ந்த அஞ்சிலா சுரின்(26) என்ற பெண் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார். இதன்மூலம் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

இன்னும் 60 தொழிலாளர்கள் தனியார் மற்றும் அரசு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில், சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

இதனால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என கூறப்படுகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## முதல்மைச்சர் விஜய்யின் தனிச்செயல்ராக ‘தி ரூட்’ ஜெகதீஷ் பழனிசாமி நியமனம்!

சென்னை, ஜூன். 23–

முதல்வர் விஜய்யின் முக்கிய நண்பராக இருப்பவர், ஜெகதீஷ் பழனிசாமி. இவர், தி ரூட் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். இவர் தற்போது, முதல்வர் விஜய்யின் தனிச்செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜெகதீஷ் பழனிசாமி, விஜய்யின் நீண்டகால நண்பர் ஆவார். இவர் தூண்டுதலின் பெயரில்தான் விஜய் துப்பாக்கி படத்திலேயே நடிக்க ஆரம்பித்ததாக கூறப்படுகிறது. இது,



விஜய்க்கு முதல் 100 கோடி ஹிட் கொடுத்த படமாக இருந்தது. ஜெகதீஷ் மீதிருந்த தோழமை காரணமாகவே விஜய் துப்பாக்கி படத்தில் தன் கதாப்பாத்திரத்திற்கு ‘ஜெகதீஷ்’ என பெயர் வைக்க சொன்னதாக ஒரு தகவலும் இருக்கிறது. ஆனால், இது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதில்லை.




தமிழக வெற்றி கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ச. ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் பிறந்த பச்சிளம் குழந்தைக்கு ஈரோடு மாநகர கழக செயலாளர் எஸ் ஏ எப் அக்கீம் தங்க மோதிரம் அணிவித்தார். அதன் பின்னர் ரத்ததானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாநகர பகுதி வட்டத்தை சார்ந்த தமிழக வெற்றி கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## தமிழக அரசின், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் “தோழி” அரசு பணிபுரியும் மகளிர் விடுதி: கலெக்டர் தகவல்!

தேனி, ஜூன். 23–

தமிழக அரசின், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பணிபுரியும் (தனியார் துறை உட்பட) மகளிர்கள் / கல்லூரி பயிலும் மாணவிகள் பயன்பெறும் வகையில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் “தோழி” அரசு பணிபுரியும் மகளிர் விடுதியானது தேனி, வீரபாண்டி கிராமம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் செயல்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் 2 படுக்கைகள் கொண்ட அறைகள் 2 மற்றும் 4 படுக்கைகள் கொண்ட அறைகள் மற்றும் 6 படுக்கைகள் கொண்ட அறைகள் (AC/Non AC) மாற்றுத்திறனாளிகளுக்கென தனி அறை, பயோமெட்ரிக் உள்நுழைவு, 24 மணி நேர பாதுகாப்பு வசதி, வைபை வசதி, சிசி டிவி வசதி, தொலைக்காட்சி பொழுதுபோக்கு அறை, படிப்பு அறை, அனைத்து வசதிகளையும் கொண்ட சமையலறை, துணி துவைக்கும் இயந்திரம், ஜெனரேட்டர், மின்தூக்கி(Lift), சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், காற்றோட்டமான சூழல், ஆரோக்கியமான உணவு ஆகிய வசதிகள் நியாயமான கட்டணத்தில் வழங்கப்படுகின்றன. எனவே, தேனி மாவட்டத்தில் பணிபுரியும் (அரசு / தனியார் ) மகளிர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் தமிழக அரசின் தோழி பணிபுரியும் மகளிர் விடுதியினை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாவது தளத்தில் அறை எண்.67இல் செயல்படும் மாவட்ட சமூகநல அலுவலகத்தினை நேரிலோ அல்லது 04546–254368 என்ற அலுவலக தொலைப்பேசி வாயிலாகவோ தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், முதியோர் களுக்கான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களை பெற்ற பொன்னமராவதி, சடையம்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஆலங்குடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வல்லதிராக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா வழங்கிய போது எடுத்த படம். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் குழந்தைசாமி, சமூக நல அலுவலர் சியாமளா, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உணவுப் பொருட்கள் பாதுகாப்பு தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார் உட்பட பலர் உள்ளனர்.

## சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு பிரத்தியேக வசதி..!!

சென்னை, ஜூன். 23–

ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் மாலை போட்டு கொண்டு சபரிமலை சென்று ஐயப்பனை தரிசிக்கின்றனர். குறிப்பாக மகரவிளக்கு பூஜை போன்ற காலங்களில் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவதால் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. இந்த பிரச்சினைக்கு ஏஐ மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

சபரிமலைக்கு வரும் பக்தர்களின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும், அடுத்த மண்டல பூஜை காலத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு முடிவெடுத்துள்ளது. கொச்சியில் நடைபெற்ற திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு உயர்நிலைக் கூட்டத்தில் தேவஸ்வம் போர்டு தலைவர் ஜெயகுமார் மற்றும் ஏ.டி.ஜி.பி மனோஜ் ஆபிரகாம் ஆகியோர் ஆலோசனை நடத்தி ஏஐ பயன்படுத்துவதற்கு அனுமதி தந்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக மண்டலகால மகரவிளக்கு பூஜைகளின்போது சபரிமலையில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நிலையில் சபரிமலையின் முழுமையான பாதுகாப்பு மற்றும் பக்தர்கள் கூட்டத்தை கையாளும் விதமாக ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக ஏ.ஐ தொழில்நுட்பத்துடன் கூடிய ஹை–ரெசல்யூஷன் கேமராக்கள், சென்சார்கள் மற்றும் ட்ரோன்கள் மூலம் சபரிமலையின் ஒட்டுமொத்தப் பகுதியும் ஜி.பி.எஸ் மேப்பிங் செய்யப்படும். அதன் மூலம் எந்தெந்த இடங்களில் கூட்ட நெரிசல் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதை முன்கூட்டியே கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

நிலக்கல், பம்பா, அப்பாச்சிமேடு,




மரக்கூட்டம் மற்றும் சரங்குத்தி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதன் மூலம் இனிவரும் காலங்களில் பக்தர்கள் சிரமமின்றி சாமி தரிசனம் செய்ய முடியும் என திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு கூறுகிறது. ஏஐ தொழில்நுட்பமானது கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கான வாய்ப்பிருக்கும் போது உடனடித் தகவல்களை காவல்துறையினருக்கு வாட்ஸ்அப் மற்றும் எஸ்.எம்.எஸ் மூலம் அனுப்பும். அதுமட்டுமில்லாமல்முகம் அங்கீகார தொழில்நுட்பம் மூலம் கூட்டத்தில் காணாமல் போகும் குழந்தைகள் மற்றும் முதியவர்களைக் கண்டறியவும், Facial recognition camera பயன்படுத்தப்படும். நிலக்கல் மற்றும் பம்பாவில் அமைக்கப்படும் டிஜிட்டல் திரைகள் மூலம், தரிசனத்திற்கு எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும் என்ற விவரம் பக்தர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்கின்றனர் அதிகாரிகள்.

வாகன நெரிசலைத் தவிர்க்க நிலக்கல்லில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதி செய்யப்படும் என்றும் வழித்தடங்களில் குப்பைகள் தேங்குதல், குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் மருத்துவ அவசரநிலைகளை ஏஐ தொழில்நுட்பம் தானாகவே கண்டறிந்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும் என்றும் கூறுகின்றனர்.

ஏஐ பயன்பாட்டிற்காக கும்பமேளா போன்ற பிரம்மாண்ட நிகழ்வுகளில் கூட்டத்தை மேலாண்மை செய்த நிறுவனங்கள் உட்பட, மூன்று முக்கிய நிறுவனங்களுடன் தேவஸ்வம் போர்டு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குள் இதற்கான ஒப்பந்தப் பணிகள் முழுமையாக முடிக்கப்படும்.இதனை அடுத்து காவல்துறையினர் மற்றும் தேவஸம் போர்டு ஊழியர்களுக்கு ஏஐ தொழில்நுட்பத்தோடு கூட்ட கட்டுப்பாடு குறித்த பயிற்சிகள் அளிக்கப்படும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

## பிரியாணி பிரியர்களுக்கு குட் நியூஸ்!




ஈரான்,ஜூன். 23–

ஈரான் அரசு ஹார்முஸ் நீரிணையை கப்பல் போக்குவரத்திற்கு மூடுவதாக அறிவித்துள்ளதால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பாஸ்மதி அரிசி மற்றும் தேயிலை வர்த்தகம் கடுமையாகப் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. இதன் காரணமாக, பாஸ்மதி அரிசியின் விலை 5 முதல் 10 சதவீதம் வரை குறையக்கூடும் என்று இந்திய ஏற்றுமதியாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். மேற்கு ஆசிய நாடுகளுக்கான கப்பல் போக்குவரத்துத் தடைபட்டுள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகிறது.

## ஒட்டன்சத்திரத்தில் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை தொழிலாளர் அணி சார்பில் தமிழ்நாடு முதல்மைச்சர் ச.ஜோசப் விஜய் பிறந்த நாள் விழா!



ஒட்டன்சத்திரம், ஜூன். 23–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் போக்குவரத்துத்துறை தொழிலாளர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவருமான ச.ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு ஒட்டன்சத்திரம் அரசு போக்குவரத்து பணி மனை வளாகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை தவெக திண்டுக்கல் மண்டல அமைப்பாளர் கே.குமரேசன்,மற்றும் கே.கண்ணன், ஆர். ரவிச்சந்திரன், சி.கணேசன் முன்னிலையில், தவெக திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ். கார்த்திக்ராஜன் தலைமையில் தொழிற்சங்க கொடியேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் ஒட்டன்சத்திரம் நகர கழக செயலாளர் எம்.குருஅருண், ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.சுறாசுரேஷ், தவெக பழனி என்.பாலன், தவெக ஒன்றிய, நகர நிர்வாகிகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை தவெக கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளானோர் கலந்துகொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுவது குறித்த முன்னேற்பாடுகள் பணிகள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா சிவகுரு பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

## திருப்பூரில் முதல்மைச்சர் விஜயின் 52-வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!

திருப்பூர், ஜூன். 23–

தமிழக வெற்றிக் கழக தலைவர் தளபதி தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்களின் 52 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் மாநகர மாவட்ட செயலாளர் எஸ். பாலமுருகன் அவர்கள் மற்றும் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வா. சத்தியபாமா அவர்களின் அறிவுறுத்தலின்ப டியும் கொங்கு நகர் பகுதி கழகம் சார்பாக பொதுமக்கள் 1000 பேருக்கு அசைவ விருந்து அன்னதானம்,மற்றும் 500 பள்ளிக் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் கொங்கு நகர் பகுதி கழக செயலாளர் சரவணகுமார் அவர்களது முன்னிலையில் 20வது வார்டு செயலாளர் எம். பிரபு அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் கொங்குநகர் பகுதி இணைச்செயலாளர் ஜே .கார்த்திக் துணைச் செயலாளர் பூபதி ராஜா,சரவணகுமார், பொருளாளர் சாந்து முகமது, செயற்குழு உறுப்பினர் சதீஷ்குமார், அப்துல் ரகுமான்,செல்வா,கலைச்செல்வம், சின்னப்பராஜ்,விகாஷினி,20வது வார்டு துணைச் செயலாளர் கார்த்திக்,20 வது வார்டு பொருளாளர் மோகன் குமார், 20 வது வார்டு B செயலாளர் கௌதம் , 19 ஆவது வார்டு செயலாளர்கள் கவிதா,கிருஷ்ணகுமார்,ஆதி ,நிர்வாகிகள் போஸ் பாண்டி, ராகுல் ,மருது சேகர்,கார்த்தி,தண்டீஸ்வரன்,தனசேகர் தங்கமுத்துகொங்குநகர் பகுதி இளைஞரணி அமைப்பாளர் நடராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வினிதா, இணை அமைப்பாளர் பவதாரணி ,கொங்கு நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சத்யா, உமா, சங்கீதா, அங்கு சாந்தி,கோகிலா, பிரியா ,கவிதா சாந்தி ,சிவ சத்தியா,வசந்தா மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சினிமா துளிகள்..!

## சினிமா ஸ்பாட்!

### ஹாலிவுட்

பிரபல இயக்குநர் மற்றும் நடிகரான Quentin Tarantino, பாடகி Kylie Minogue உடன் புதிய திரைப்பட படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ளார். இந்த படப்பிடிப்பு வேல்ஸ் பகுதியில் நடைபெறுவது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

2026–ம் ஆண்டு ஹாலிவுட் பாக்ஸ் ஆபிஸ் வசூல், கொரோனா காலத்திற்குப் பிறகு மிகப்பெரிய வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. குறிப்பாக Toy Story 5 உலகளவில் சாதனை வசூலை குவித்துள்ளது.

ஜூன் 26–ம் தேதி வெளியாகும் Supergirl திரைப்படம் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இயக்குநர் Quentin Tarantino மற்றும் பாடகி Kylie Minogue இணைந்து புதிய திரைப்படத்தில் நடித்து வருவது ரசிகர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வேல்ஸ் பகுதியில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

OTT உலகில் இந்த வாரம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள House of the Dragon, Avatar: Fire and Ash மற்றும் The Bear வெளியாகியுள்ளன.

Meryl Streep தனது 77வது பிறந்தநாளை கொண்டாடிய நிலையில், அவரது புதிய படங்கள் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

### கோலிவுட்

தமிழ் சினிமாவில் ஜூலை மாத வெளியீடுகளுக்கான அறிவிப்புகள் அடுத்த வாரம் வெளியாக உள்ளதாக தயாரிப்பாளர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### டோலிவுட்

Ram Charan நடித்த Peddi திரைப்படம் தொடர்ந்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

இயக்குநர் Singeetam Srinivasa Rao இயக்கிய Sing Geetham திரைப்படம் சமீபத்தில் வெளியான தெலுங்கு படங்களில் அதிகம் பேசப்படும் படமாக உள்ளது.

ஜூன் 26–ல் வெளியாகும் Risk மற்றும் Pellainde Kani No Kahani படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

Chiranjeevi நடித்த Vishwambhara மற்றும் Nani நடித்த The Paradise படங்கள் அடுத்த மாதங்களில் வெளியாகவுள்ள முக்கிய படங்களாக உள்ளன

### கோலிவுட்

நடிகர் Arya நடித்துள்ள Ananthan Kaadu திரைப்படம் ஜூன் 25–ம் தேதி வெளியாக உள்ளது.

சமீபத்தில் வெளியான Manu, Dark Giant, Engal Thangam உள்ளிட்ட திரைப்படங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

ஜூன் இறுதியில் வெளியாகும் Lakshmikanthan Kolai Vazhakku மற்றும் Angikaaram படங்களுக்கு நல்ல எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020